

சென்னை, தலைமைச் செயலகத்தில் 18.07.2025 அன்று, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் அவர்களை மொரிஷியஸ் நாட்டின் இளைஞர் (ம) விளையாட்டுத் துறை அமைச்சர் தர்மராஜன் நாகலிங்கம் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்நிகழ்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் ஆகியோர் உடனிருந்தனர்.




சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று (19.07.2025) தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவ மாணவியர்களிடையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாரட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுத் தொகையினை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் அருட்தந்தை சொ.ஜோ.அருண் சே.ச, துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், முனைவர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், முனைவர் ஜெ.ஹாஜாகனி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சா.விஜயராஜ் குமார், உறுப்பினர் செயலர் (பொ) திருமதி மு. ஆசியா மரியம், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்த – முதல்வரால்

# 2,436 நபர்களுக்கு புதிய ஆசிரியர் பணிக்கான ஆணை விரைவில் வழங்கப்படும்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

கள்ளக்குறிச்சி, ஜூலை 20-

கள்ளக்குறிச்சி மாவட்டம், நீலமங்கலம் தனியார் பள்ளிக் கலையரங்கில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு குறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், முன்னிலையில், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று முன்தினம் (18.07.2025) வெள்ளிக்கிழமை நடைபெற்றது.



இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தலைமை தாங்கி கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளின் தேர்ச்சி விகிதம், தேர்ச்சி விகிதக் குறைவு, தேர்ச்சிக் குறைவிற்கான காரணங்கள், பாட வாரியாக மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தேர்ச்சி விகிதம், பள்ளிகளின் செயல்பாடு, மாணவர்களின் கற்றல் திறன், கற்றல் திறனை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து பள்ளித் தலைமை ஆசிரியர்களிடம் விரிவாகக் கேட்டறிந்து ஆய்வு செய்தார், மேலும் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் கருத்துகளையும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தனித்தனியாகக் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

இதன் பின்னர் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களுக்கு சிறப்பான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் பள்ளிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதி மேம்பாடு, நவீன மயமாக்கம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி பள்ளிக் கல்வித்துறை முன்மாதிரித் துறையாக விளங்கி வருகிறது.

அதனடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவுத் தேர்வு 2025 குறித்த ஆய்வுக் கூட்டம், கள்ளக்குறிச்சியில் இன்றைய தினம் இக்கூட்டத்தில் மாணவர்களின் கற்றல் திறன், தேர்ச்சி விகிதம், தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள், தலைமை ஆசிரியர்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பின்தங்கிய பள்ளிகளைக் கண்டறிந்து அதன் நிலையை மாற்றவும் இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிப்பது குறித்தும் விரிவாக கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டது, மேலும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை, புதிய பள்ளிக் கட்டிடங்கள் விபரம் மற்றும் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும் ஏற்கனவே சென்னையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இதேபோன்று இன்றைய ஆய்வுக் கூட்டத்திலும் மாணவர்களின் இடைநிற்றலுக்கான காரணம், தேர்ச்சி விகிதம், பள்ளிக்கு மாணவர்களின் சேர்க்கை விகிதம், பள்ளிக்கு வருகை தராத மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பள்ளிக்கு வருகை தர மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பள்ளிகளில் மாணவர்கள் ஒவ்வொரு பாடத்திலும் கற்கும் திறனை ஆசிரியர்கள் கவனிக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களை நன்றாக கவனித்து அவர்களின் செயல்பாடுகளை அறிந்து கொள்ள வேண்டும், ஆசிரியர்கள் நடத்தும் பாடங்களை மாணவர்களுக்கு நன்றாக புரிந்துள்ளதா, நன்றாக கவனிக்கிறார்களா என்பதை ஆசிரியர்கள் அறிந்து கொள்ள வேண்டும். மாநில அளவிலான கற்றல் திறன் தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் அடிப்படையில் மாணவர்களுக்கு கற்றுத்தர வேண்டும்.

ஆசிரியர்கள் நடத்தப்படும் பாடங்களிலிருந்து மாணவர்களிடம் எளிய முறையில் கேள்விகளை கேட்க வேண்டும். மாணவர்களின் கல்வி கற்றலை உயர்த்தும் வகையில் ஆசிரியர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள். உயர்கல்வி மாணவர்களுக்கு உரிய முறையில் பாடம் கற்பித்து வருகிறார்கள், முதலமைச்சர் அவர்களால் கொரோனா காலத்தில் மாணவர்கள் கல்விக் கற்கும் வகையில் இல்லம் தேடிக் கல்வி திட்டம் உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எண்ணும் எழுத்தும் திட்டம் தொடங்கப்பட்டது. இதுபோன்று பல்வேறு திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி வளர்ச்சிக்கென பல்வேறு தொழில்நுட்பமும் செயல்பட்டு வருகிறது.

அதிகப்படியான தொழில்நுட்பம் வந்தாலும் ஆசிரியர்களுக்கு இணையாக கற்றுத் தர முடியாது. தலைமை ஆசிரியர்கள் அடிக்கடி பள்ளியில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். மாணவர்களிடம் கல்வித் தொடர்பாக கேள்விகள் கேட்கப்பட வேண்டும். மாணவர்களின் திறன் அறிந்து ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாநில அளவிலான அடைவுத் தேர்வு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெறுகிறது.

அரசு பள்ளி மாணவர்களுக்கு உயர்நிலை, மேல்நிலைக் கல்வியைப் போன்று அடிப்படை கல்வியையும் மேம்படுத்த தமிழக அரசு அதிக அக்கறை செலுத்தி வருகிறது. மேலும் தமிழ்நாட்டில் மாணவர்களின் கல்வித் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2,436 நபர்களுக்கு புதிய ஆசிரியர் பணிக்கான ஆணை விரைவில் வழங்கப்பட உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் எஸ்.எல்.ஏ.எஸ். அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. அதனை ஆசிரியர்கள் தகுந்த முறையில் மாணவர்களுக்கு கற்பித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். மாணவர்கள் ஆசிரியர் களிடமிருந்து கல்விப் பாடத்தை மட்டுமல்லாமல் வாழ்க்கை பாடத்தையும் கற்றுக் கொள்கிறார்கள்.

எனவே கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் கற்றல் திறனை அதிகரிப்பதற்கான திட்டமிடல் மற்றும் செயல்பாடுகளை அனைத்து நிலை கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கா.கார்த்திகா, மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) மா.ரேணுகோபால், தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




தி.மு.க. சட்டத்துறையின் சார்பில் மேற்கு மண்டலம் 2 கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் 2026 ஆண்டு நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு விருதுநகர் தெற்கு மற்றும் வடக்கு மாவட்டத்திற்கு உள்ளடங்கிய கழக வழக்கறிஞர்கள் மற்றும் DLC, CLC, FLC, TLC, ULC Div LC ஆகியோர்களுக்கு பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், தங்கபாண்டியன் கழக சட்டத்துறை இணை செயலாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன், சு. ராதாகிருஷ்ணன், துணை செயலாளர் ராஜா முகமது, வழக்கறிஞர்கள் ஏ.கலாநிதி ,எஸ்.எஸ்.. மனோஜ் மற்றும் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்ட வழக்கறிஞர் அணியின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முன்னதாக நிகழ்ச்சி துவங்குவதற்கு முன்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மூத்த மகன் மு.க.முத்து அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பயிற்சி வகுப்பு துவங்குவதற்கு முன்பாக அன்னாரின் மறைவிற்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### 46–ஆம் ஆண்டில் பயணிக்கும்

# இணையில்லா இளைஞர் படையே சூளுரைத்துக் கிளம்பிடுவீர்!



உலகில் எந்தவொரு இயக்கமும் தொடர்ந்து மக்களுக்காக பாடுபட வேண்டுமானால் தலைமுறை இடைவெளியில்லாமல்,சங்கிலி தொடர் போல மனித ஆற்றல் இருந்திட வேண்டும்.அப்படிப்பட்ட நிலை இல்லாவிட்டால் அந்த இயக்கம் ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் கொஞ்சம் கொஞ்சமாக முதுமை அடைவதோடு,அதன் சிந்தனையிலும் தேக்கம் ஏற்படும்.ஆனால்,நமது கழகத்தின் இதயதுடிப்பாய் 46 ஆண்டுகளாய் சீரிய தொண்டாற்றி வரும் இளைஞர் அணி காலப்போக்கில் கழகத்தின் நோக்கம், இலக்கு,இலட்சியம் இதனை மங்காமல் தலைமுறை தாண்டியும் துடிப்புடன் செயலாற்றி வருகிறது.

புரட்சி இயக்கங்கள் உலகில் தோன்றி அந்த புரட்சியின் நோக்கம் நிறைவேறியோ அல்லது நிறைவேறாமலோ ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் நீர்த்து போயிருக்கின்றன,அத்தகைய இயக்கங்கள் யாருக்கும் தெரியாமல்,யாரும் எதிர்பாராத நிலையில் திடீரென தோன்றி சிறிது காலம் பேயாட்டம் ஆடிவிட்டு திடீரென மறைந்து போன வரலாறுகள் பல.ஆதிகாலம் தொட்டு இன்றுவரை உலக நாடுகளில் எத்தனை,எத்தனையோ விதமான புரட்சிகள் நடைபெற்றிருக்கின்றன,அவற்றினால் மக்கள் பல அனுபவங்களையும், அனுகூலங்கள் அடைந்துள்ளனர்.ஒவ்வொரு புரட்சியும் அந்தந்த கால கண்ணோட்டத்திற்கு புதுமையாக இருந்ததே தவிர தொடர்ந்து அந்த இயக்கங்கள் மக்களிடையே செல்வாக்கை நிலைநிறுத்தி கொள்ள இயலாமல் மறைந்து விட்டன.

தொடங்கப்பட்டு இத்துணை ஆண்டுகளுக்கு பின்னும் இயக்கத்தின் கொள்கை,லட்சியம்,கோட்பாடுகளோடு தொடர்ந்து மக்களிடையே துடிப்போடும், எடுப்போடும் இருக்கும் ஒரே இயக்கம் நமது திராவிட முன்னேற்ற கழகம் மட்டுமே,அதற்கு அடுத்த தலைமுறையினரின் உற்சாகமும்,நமது இளைஞர் அணியின் உத்வேகமும் முக்கிய காரணம் எனச்சொன்னால் அது மிகையாகாது.

மக்களின் தேவைகள் காலத்திற்கேற்ப மாறக்கூடியவை,அந்த மாற்றத்தை விரும்பும் மக்களின் உணர்வுகளை சரியாக புரிந்து கொண்டு இயக்கத்தை கட்டமைப்பதில் திராவிட முன்னேற்ற கழகம் அரசியல் உலகில் என்றும் தனித்தன்மையோடு திகழ்கிறது.

தந்தை பெரியாரும்,அறிஞர் அண்ணாவும்,முத்தமிழறிஞர் கலைஞரும் உருவாக்கி நமக்கு தந்த கொள்கைகளை இன்று திராவிட மாடல் என உலகமே வியந்து பாராட்டும் வகையில் முத்தான திட்டங்களால் செயல்படுத்தி அவர்களது கொள்கைகள் தமிழ் இனத்திற்கு மட்டுமல்ல சுயமரியாதை உடைய எவருக்கும் எக்காலத்திற்கும் ஏற்றதொரு கூர் மழுங்கா குத்தீட்டிகள் என நமக்கெல்லாம் காட்டி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட பேரரசர் நமது கழக தலைவர் இளைய தலைமுறையினரால், அவர் தம் அன்பு உள்ளங்களால் “அப்பா” என அன்போடு அழைக்கப்படும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் தமிழ்நாடு திராவிட மாடல் ஆட்சி உலகத்திற்கே மாடல் ஆட்சியாக செயல்பட்டு வருகிறது.



**வழக்கறிஞர், ஆ.மணி எம்.பி.**
தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர்

தமிழர்களின் மொழி,கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம், தொன்மை இவற்றில் எவ்வித சமரசமும் செய்து கொள்ளாமல் வீறுநடை,வெற்றி நடை போட்டு கட்டி காத்து வருவது நமது திராவிட முன்னேற்றக் கழகம்.

1944 ஆம் ஆண்டு திராவிடர் கழகம்,1949 ஆம் ஆண்டு திமு கழகம் இரண்டும் இருகுழல் துப்பாக்கிகளாய் தமிழ்நாடு வீதிகளில் சுழன்றன,இருளை அகற்றிட சூளுரைத்து நின்ற தமிழ்நாடு இளைஞர்கள் பதவி,பவிசு,அதிகாரம் என எதையும் எதிர்பார்க்காமல் உயிர் தியாகத்திற்கும் துணிந்து, நெஞ்சை நிமிர்த்தி நின்று சமுதாய புரட்சிக்கு தங்களை அர்ப்பணித்து கொண்டனர்.

“ஓ மனிதனே ! நீ எந்த நாட்டை சேர்ந்தவனாயிருந்தாலும் சரி.

எந்தவிதமான அபிப்ராயத்தை கொண்டவனாக இருந்தாலும் சரி.

உனது சரித்திரத்தை நன்றாக படித்து பார் !

எங்கே? புத்தகங்களிலா?

பொய்யர்களால் எழுதப்பட்ட புத்தகங்களிலா?

இல்லை இல்லை ! இயற்கையிலே

பொய் சொல்லத்தெரியில் தமிழ்நாட்டின் மக்கள் மன்றத்தில் தி.மு.க.வின் மாலை நேர பொதுகூட்ட மேடைகளில் உணர்ச்சி பெருக்குடன் எடுத்து செல்லப்பட்டது.

தமிழ் இனத்திற்கு நீ யார்? உன் இனம் எப்படிப்பட்டது?

சிந்தித்து பார் !

சிங்கமென சீறிடு!

என சமூக அக்கறையும்,சமுதாய உணர்வையும் தட்டியெழுப்பி தமிழினத்தை துள்ளி எழ செய்தது திமுக.

மக்களின் ரத்தநாளத்தோடு கலந்து உணர்விலும்,உயிரிலும்,உறவாடி,பாசத்திலும்,

நேசத்திலும் வளர்ந்த இந்த இயக்கத்தை தொய்வின்றி தொடர்ந்து வீறுநடை போட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ் இனத்தின் வளர்பிறையாய் கழக இளைஞர் அணி உதயமானது.தி.மு.க.வில் பல்வேறு அணிகள் சிறப்பாக செயல்பட்டு வந்தாலும் முழுக்க முழுக்க இளைஞர்களை கொண்ட இளைஞரணி கழகத்தின் இருதயம் போன்றது.

நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை கீற்றாய் 1980 ஆண்டு மதுரை ஜான்ஸி ராணி திடலில் வெண் புறாக்கள் போல லட்சோபலட்சம் இளைஞர்கள் அலைகடலாய்,ராணுவ சிப்பாய்களாய் அணிவகுத்த காட்சி கண்கொள்ளாக்காட்சி !

இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்று இளைஞர் பட்டாளத்திற்கு தலைமை தாங்கி,கழகத்தின் இருவண்ணக் கொடியினை ஏந்தி வந்த பொழுது வீதியெங்கும் திரண்டிருந்த தமிழ்நாடு மக்கள் ஆனந்த கூத்தாடி மகிழ்ந்தனர்.1983 ஆம் ஆண்டு திமுக இளைஞர் அணியின் மாநில செயலாளர் பொறுப்பு கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கப்பட்டது.தமிழ்நாடு முழுக்க குக்கிரா மங்கள் தோறும் மு.க.ஸ்டாலின் நேரில் சென்றார்.எளிதில் அணுகமுடியாத கிராமங்களுக்கு மாட்டு வண்டியில்இரு சக்கர வாகனத்தில்,நடந்தே சென்றும் ஆற்றல் மிக்க இளைஞர்களை கண்டெடுத்து கழகத்தின் கொள்கையை,குறிக்கோளை,லட்சியத்தை,சமூக நீதியை, கலைஞரின் முழக்கங்களை போதித்தார்.அவரது கடின உழைப்பால் பட்டிதொட்டி எங்கும் இளைஞர் அணி புதிய எழுச்சி ஏற்படுத்தியது,மக்களின் பேராதரவை பெற்றது, ஒரு உணர்ச்சிபூர்வ வரலாறு!

2019 ஆம் ஆண்டு தி.மு.க. இளைஞர் அணி செயலாளராக தலைமையேற்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர்களை புதிய எழுச்சியோடு வழி நடத்தி புது வரலாறு படைத்து வருகிறார்.30 லட்சம் இளைஞர்களை இளைஞர் அணியில் சேர்க்க சூளுரைத்து பட்டிதொட்டி எங்கும் கிராமம் நகரம் என பம்பரமாக சுழன்று பணி ஆற்றி சாதித்துள்ளார்.இளைஞர்களை நல்வழிப்படுத்தும் வகையில் கிராம்தோறும் ஒரு கலைஞர் நூலகத்தினை இளைஞர் அணி மூலம் உருவாக்கியுள்ளார்.

விளையாட்டு துறையில் சாதிக்க துடிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கங்களை கிராமம் தோறும் கிடைக்க செய்து அவர்களின் உடலும் உள்ளமும் மேம்படும் வகையில் பல்வேறு சீரிய திட்டங்களை இளைஞர் அணியினர் மூலம் செயல்படுத்தி வெட்டி வா! என்றால் கட்டி வரும் வகையில் இளைஞர் அணியினரை வீறுமிகு சிங்கங்களாய், சுறுசுறுப்பில் தேனீக்களாய் உருவாகி உள்ளார் நமது தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

46 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் கழகத்தின் இளைஞர் அணி “சங்கங்களால்,நல்ல நல்ல சங்கங்களால் நாம் சாதித்தல் கூடும்,

பெரும்,பெரும் காரியம்” என்று புரட்சி கவிஞர் பாரதிதாசன் பாடினாரே அதை உணர்ந்து ஒப்பற்ற எதிர்காலத்தை உருவாக்கிட தமிழ்நாடு துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் சூளுரைத்து

முதல் அணி மாத்திரம் அல்ல,
முதன்மை அணி என்று
பாராட்ட பெற்ற
இணையில்லா
இளைஞர் படையே !
வெற்றி நடைபோடுவீர் !!